## உலக வறுமைக்கு எதிரான போராட்டத்திற்கு நிதியுதவி வழங்கும் Millennium Challenge Corporation (MCC)

The Millennium Challenge Corporation (MCC) உலக வறுமைக்கு எதிரான போராட்டத்தை முன்னெடுப்பதற்கு உதவிவரும் புத்தாக்க, சுயாதீன அமெரிக்க வெளிநாட்டு உதவி நிறுவனமாகும். 2004ஆம் ஆண்டில் அமெரிக்க கொங்கிரசினால் உறுதியான இருதரப்பு ஆதரவுடன் உருவாக்கப்பட்ட MC சிறந்த கொள்கைகள், நாட்டு உடைமை, பயன்கள் ஆகியவற்றில் கவனம் செலுத்துவதன் மூலம் எவ்வளவு சிறப்பாக அமெரிக்க வெளிநாட்டு உதவியை வழங்க முடியுமென்ற முறைசாரா பேச்சுக்களை மாற்றியுள்ளது.

நல்லாட்சி, பொருளாதார சுதந்திரம், சொந்த குடிமக்களின் நலனுக்காக முதலீடு செய்தல் ஆகியவற்றுக்கு அர்ப்பணிப்பாக இருக்கும் வளர்முக நாடுகளுடன் MCC பங்குடைமையை ஏற்படுத்திக் கொள்கிறது.

இத்தகைய சிறந்த செய்பாடுகளை மேற்கொள்ளும் நாடுகள் நிலைபேறான பொருளாதார வளர்ச்சி ஊடாக வறுமையை போக்குவதற்கு பாரிய அளவிலான நன்கொடைகளை MCC அந்நாடுகளுக்கு வழங்குகிறது. ஏனைய அமெரிக்க மற்றும் சர்வதேச அபிவிருத்தி திட்டங்களுக்கும் தனியார்துறை முதலீட்டுக்கான சூழலை உருவாக்குவதற்குமென MCC இன் நன்கொடைகள் வடி வமைக்கப்பட்டுள்ளன. MCC நன்கொடைகள் 3 பிரதான வகையறாக்களை கொண்டவை: நிதிஉடன்படிக்கைகள், சிறு அளவிலான கொடைகள், பிராந்திய முதலீட்டுக்கான சமகால நிதி உடன்படிக் கைகள்.

சமகால உடன்படிக்கைகளாவன வறுமையை குறைத்து பொருளதாரவளர்ச்சியை ஊக்குவிப்பதற்கு குறிப்பிட்ட சில திட்டங்களுக்கு நிதியளிப்பதற்காக MCC க்கும் தகுதிவாய்ந்த ஒரு நாட்டுக்கும் இடையே செய்து கொள்ளப்படும் ஐந்து வருடகால உடன்படிக்கைகளாகும். சிறு அளவிலான நன்கொடைத் திடட்டங்களாவன நிதி அளிப்பிற்கு தகுதியற்றவையும் அதேவேளை கொள்கை செயற்பாட்டை விருத்தி செய்வதற்கு உறுதியாக அர்ப்பணிப்புச் செய்யும் நாடுகளுக்கு சிறு அளவிலான கொடைகளை

வழங்குவதாகும். எல்லைகடந்த பொருளாதார ஒருங்கிணைப்பு, வர்த்தகம், உடனுழைப்பு ஆகியவற்றை ஊக்குவிப்பதற்கு MCC பிராந்திய முதலீட்டுக்கான சமகால நிதி உடன்படிக்கைகளை மேற்கொள்ள 2018ஆம் ஆண்டு ஏப்ரல் மாத AGOA, MCA நவீனமயப்படுத்தல் சட்டம் அதிகாரம் அளித்தது.

பிரதம நிறைவேற்று அதிகாரி ஒருவரின் தலைமையிலான MCC 9 உறுப்பினர்களை கொண்ட அரச-தனியார் பணிப்பாளர்கள் சபையின் ஆளுகைக்கு உட்பட்டதாகும். ராஜாங்க செயலாளரின் தலைமையிலான MCC சபையில் திறைசேரி செயலாளர், அமெரிக்க வர்த்தக பிரதிநிதி ஆகியோருடன் USAID நிறுவனமும் அங்கம் வகிக்கிறது.

---------------------------------------------------------------------------------------------------------------